General Information Technology Examination, 2007

பொதுத் தகவல் தொழினுட்பவியல்

---

1) எண் 73 இன் துவித எண்

1) 001010

(2) 1010011

(3) 1001001

(4) 1001110

2. துவித எண் 11011101010 இன் பதின் அறுமச் (hexadecimal) சமவலு

1. 6752

(2) 6EA

(3) DD2

(4) DD4

(3) எண்ம (Octal) எண் தொகுதியின் அடி

(1) 2

(2) 8

(3) 10

(4) 16

(4) 1010, 1101 என்னும் இரு துவித எண்களின் கூட்டுத்தொகை 101

(2) 10110

(3) 10111

(4) 0111

5. தர்க்கக் கோவை A+A.B யிற்குச் சமவலுவானது

(1) A

(2) B

(3) A+B

(4) A,B

6. பின்வரும் மெய்நிலை அட்டவணைக்குரிய தருக்கச் செய்பணி (logical operation)

Input 1	Input 2	Output
0	0	1
0	1	0
1	0	0
1	1	1

(1) NOR

(2) NAND

(3) XOR

(4) XNOR

7. வருவிளைவு 0 ஆக இருப்பதற்கு A, B ஆகிய இரு உள்ளீடுகளுக்கும் வழங்க வேண்டிய பெறுமானங்களைக் காண்க.



(1) 0 உம் 0 உம்

(2) 0 உம் 1 உம்

(3) 1 உம் 0 உம்

(4) 1 உம் 1 உம்

8. வரியுருக்களை (characters) வகைகுறிப்பதற்குப் பின்வருவனவற்றில் எதைக் குறிமுறையாக்கத் திட்டம் scheme) பயன்படுத்தலாம்?

(1) EBCDIC

(2) IEEE

(3) ANSI

(4) TURBO

9. பின்வருவனவற்றில் எது ஒரு மூடிய தொகுதியின் (closed system) ஒரு கூறன்று ?

(1) பின்னூட்டு (feedback)

(2) உள்ளீடு (input)

(3) வருவிளைவு (output)

(4) வரைப்பாடு (boundary)

10. பின்வருவனவற்றில் எது தகவல் முறைமையின் எந்த வகையினதும் இன்றியமையாச் செயல் (function) அன்று ?

(1) தகவலைச் சேகரித்தல் (collecting information)

(2) தகவலைப் பதிவுசெய்தல் (recording information)

(3) தகவலை முறைவழிப்படுத்தல் (processing information)

(4) தகவலைச் சுரங்கமறுத்தல் (mining information)

11. பின்வருவனவற்றில் எது தகவலின் பெறுமானப் பண்பு (value attribute) அன்று ?

(1) துல்லியம் (accuracy)

(2) அளவு (size)

(3) பொருத்தம் (relevance)

(4) காலவியல்பு (timeliness)

12. பின்வருவனவற்றில் எது தீர்மானம் மேற்கொள்ளும் மட்டம் (level) அன்று?

(1) செய்பணி (operational)

(2) உத்தி (tactical)

(3) விரகு (strategic)

(4) நிதி (financial)

13. பின்வருவனவற்றில் எது ஒரு வல்லுநர் முறைமை (Expert System) தொடர்பாகப் பொய்யானது?

(1) வல்லுநர் முறைமைகளைப் பாட வல்லுநர்கள் மாத்திரம் பயன்படுத்தலாம்.

(2) வல்லுநர் முறைமைகளை உருவாக்குவதற்குப் பாட வல்லுநர்கள் தேவைப்படுவர்.

(3) வினாக்களுக்கு நியாயித்தலினூடாக விடையளிப்பதற்கு வல்லுநர் முறைமைகளுக்கு மாத்திரம் முடியும்.

4) ஆசிரியர்களைக் குறைநிரப்புவதற்கு வல்லுநர் முறைமைகளைக் கற்பித்தல் கருவியாகப் பயன்படுத்தலாம்.

14. முறைமை அபிவிருத்தி வாழ்க்கை வட்டத்தில் எந்தக் கட்ட நிலையை (phase) ஏனைய கட்ட நிலைகளுக்கு முன்பாக நிறைவேற்ற வேண்டும் ?

(1) முறைமை நடைமுறைப்படுத்தல் (System Implementation)

(2) முறைமை வடிவமைப்பு (System Design)

(3) முறைமைப் பகுப்பாய்வு (System Analysis)

(4) முறைமை பேணல் (System Maintenance)

15. பின்வரும் கூற்றுகளில் எது சரியானது ?

(1) முறைமை வடிவமைப்புடன் (system design) சோதனைத் திட்டத்தைச் (test plan) சமாந்தரமாக உருவாக்கலாம்.

(2) சோதனை வகைகள் (test cases) முதலில் இனங்காணப்பட்டுப் பின்னர் சோதனைத் திட்டம் உருவாக்கப்படும்.

(3) சோதித்தல் முறைமை அபிவிருத்தியின்போது ஓர் இன்றியமையாக் கட்ட நிலையன்று.

(4) முழுத் தொகுதியுடன் தனித்தனி மொடியூல்கள் (individual modules) எல்லாவற்றையும் ஒருங்கிணைத்த பின்னர் நடைபெறும் சோதித்தல் அலகுச் சோதித்தல் (unit testing) எனப்படும்.

16. உமது கணினியை Microsoft Windows சூழலில் மீளத் தொடக்கத் (restart) தேவையான சாவிச் சேர்மானம் யாது ?

(1) Ctrl+Alt+Del

(2) Cirl+Shift+Del

(3) Ctrl+Alt+Shift

(4) Ctrl+Alt+Esc

17. Windows desktop இல் வட்டுச் செலுத்திப் படவுருக்கள் (disk drive icons) வழக்கமாகக் காட்சிப்படுத்தப்படும் உறையின் (folder) பெயர்

(1) My Documents

(2) My Computer

(3) Recycle Bin

(4) Control Panel

18. தெரிந்தெடுத்த பாட ஆவணத்தில் (text document) உள்ள சொற்களின் எண்ணிக்கையைப் பெறுதவற்கு Microsoft Word இல் எக்கருவியைப் பயன்படுத்தலாம்?

(1) Spelling & Grammar

(2) Speech

(3) Auto Correct Options

(4) Word Count

19 பின்வருவனவற்றில் எது மின்னஞ்சல் முகவரிக்கு ஒரு செல்லுபடியான உதாரணமாகும்?

(1) www.schoolnet.lk

(2) exams @doenets.lk

(3) http://www.doenets.lk

(4) www.education.gov.lk

20. ஒரு Excel பணித்தாளில் (worksheet) A1, A2 ஆகிய கலங்களில் (cells) முறையே 10, 20 என்னும் பெறுமானங்கள் உள்ளன நீர் A3 கலத்தில் =A1+A2 என type செய்தால் அது எங்ஙனம் காட்சிப்படுத்தப்படும் ?

1) A1+A2 ஒரு முகப்பு அடையாளமாக (label)

(2) A1 இனதும் A2 இனதும் கூட்டுத்தொகை 30 ஆக

(3) தேதிச் செயல் (date function) ஆக

(4) முதல் நான்கு வரியுருக்களாக (characters) மாத்திரம்

21. Microsoft Excel பணித்தாளில் கலம் B8 இல் = (A1*B1) (C1+B1) என்னும் சூத்திரம் (formula) தேக்கி (store) வைக்கப்பட்டுள்ளது. A1, B1, C1 ஆகியவற்றில் உள்ள பெறுமானங்கள் பின்வரும் அட்டவணையில் காணப்படு கின்றவாறு இருக்குமெனின், B8 இல் காட்சிப்படுத்தப்படும் பெறுமானம் யாது?

Cell	Value
A1	25
B1	10
C1	40

(1) 16.25

(2) 6.25

(3) 5.00

(4) 0.70

22. Microsoft Access உடன் உருவாக்கப்பட்ட தரவுத்தளத்திலிருந்து ஒரு நிபந்தனைக்கமையத் தரவுகளை பிரித்தெடுக்கப் பயன்படுத்தப்படும் இலக்குப் பொருளுக்கு (object) வழங்கும் பெயர் யாது?

(1) அறிக்கை (report)

(2) படிவம் (form)

(3) அட்டவணை (table)

(4) வினவல் (query)

23. தரவுத்தளத்தில் புலங்களைச் சேகரித்தலுக்கு வழங்கும் பெயர்

1) கோப்பு (file)

(2) பிடிப்புப்பலகை (clipboard)

(3) தளக்கோலம் (layout)

(4) பதிவு (record)

24. Pascal செய்நிரலில் (program) இரு கூற்றுகள் வேறுப்படுத்தப்படுவது

(1) முக்காற்புள்ளியினால் (colon)

(2) அரைப்புள்ளியினால் (semi-colon) (3) முற்றுத்தரிப்பினால் (full-stop)

(4) காற்புள்ளியினால் (comma)

25. பின்வருவனவற்றில் எது பாஸ்கலில் ஒரு செல்லுபடியான அச்சு அடையாளக்காணி (identifier) அன்று ?

(1) integer

(2) real

(3) char

(4) float

26. பெறுமானம் 200 ஆன LENGTH என்னும் ஒரு மாறிலியை வரையறுக்கும் திருத்தமான மாறாக் கூற தெரிந்தெடுக்க.

(1) type LENGTH = 200;

(2) const LENGTH = 200;

(3) const LENGTH := 200;

(4) var LENGTH - 200;

27. பின்வருவனவற்றில் எது பாஸ்கலில் செல்லுபடியற்ற (invalid) பணிசெய்குனர் (operator) ஆகும்?

(1) :=

(2) =>

(3) >

4. <=

28. பின்வரும் கூற்றுகளிடையே முழு எண் (integer) வகையின் 10 கூற்றுகளைக் கொண்ட NUMBERS எனும் வரிசை (array) வகையை வரையறுக்கும் திருத்தமான வகை வரைவிலக்கனத்தைத் தெரிந்தெடுக்க.

(1) type NUMBERS = array(1..10) of int;
(2) type NUMBERS := array(1..10) of integer;
(3) type NUMBERS = array[1..10] of integer;
(4) type NUMBERS := array[1..10] of int;

29. மாறி X இன் பெறுமானம் பின்வருவனவற்றில் யாதாக இருக்கும்?

For index:= 1 to 5 do X:= X - index;

(1) 5 (2) 10 (3) 15 (4) 20

30. மாறும் கிரயம் 8000 இலும் குறைவாகவும் மாறும் இலாபம் 40000 இற்குக் குறையாமலும் இருப்பின், எந்தப் பஸ்கல் கூற்று Go ahead" எனும் உரைச் சரத்தைத் (text string) திருத்தமாகக் காட்சிப்படுத்தும்?

(1) If (cost <8000 AND (profit >= 40000) then write(“Go ahead");

(2) If (cost <8000 AND (profit >= 40000) then write(“Go ahead');

(3) If (cost <8000 AND (profit < 40000) then write("Go ahead");

(4) If (cost <8000 ND (profit <= 40000) then write('Go ahead');

31. பின்வரும் பஸ்கல் கூற்றின் வருவிளைவை (output) விவரிக்கும் திருத்தமான கூற்றைத் தெரிந்தெடுக்க.

writeln(X, Y Z);

1. X, Y ஆகிய மாறிகளிளின் பெறுமானங்களை நடப்பு வருவிளைவு வரியிலும் மாறி Z இன் பெறுமானத்தை அடுத்த வரியிலும் எழுதுக.

2. X, Y, Z ஆகிய மாறிகளின் பெறுமானங்களை நடப்பு வருவிளைவு வரியில் எழுதி நிலைகாட்டியை (cursor) அதே வரியில் அடுத்த நிலைக்கு நகர்த்துக.

3. நிலைகாட்டியை அடுத்த புதிய வரிக்கு நகர்த்தி X, Y, Z ஆகிய மாறிகளின் பெறுமானங்களைப் புதிய வரியில் எழுதுக.

4. X Y Z ஆகிய பெறுமானங்களை நடப்பு வருவிளைவு வரியில் எழுதி நிலைகாட்டியை அடுத்த வரியின் முதல் நிலைக்கு நகர்த்துக.

32. {<>, +, AND, OR, NOT} என்னும் பணி செய்குனர் பட்டியலிலிருந்து மிகக் கூடிய முன்னுரிமையை உடைய பணிசெய்குனரைத் (operator) தெரிந்தெடுக்க.

(1) < > (2) + (3) AND (4) NOT

33 கணினியின் தொடக்க முறைவழியைப் (booting process) பற்றிய மிகப் பொருத்தமான கூற்றைத் தெரிந்தெடுக்க.

(1) முதன்மை நினைவகத்திலிருந்து (main memory) பதுக்கு நினைவகத்துக்கு (cache memory) பிரயோகத் தரவுகளைப் பிரதி செய்யும் முறை வழியாகும்.

2. வன் வட்டி லிருந்து (hard disk) முதன்மை நினைவகத்திற்குப் பிரயோகத் தரவுகளை ஏற்றும் (loading) முறை வழியாகும்.

3) பதுக்கு நினைவகத்திலிருந்து முதன்மை நினைவகத்தினுள்ளே பணிசெயல் முறைமையை (operating system) ஏற்றும் முறைவழியாகும்.

(4) வன் வட்டு, CD Rom, நெகிழ் வட்டு (floppy disk) போன்ற ஒரு துணைத் தேக்கச் சாதனத்திலிருந்து (secondary storage device) முதன்மை நினைவகத்திற்குப் பணிசெயல் முறைமையை ஏற்றும் முறைவழியாகும்.

34. நீர்மட்டப் படித் திரை (Liquid Crystal Display) (LCD) பற்றிய பிழையான கூற்றைத் தெரிந்தெடுக்க.

(1) கதோட்டுக் கதிர்க் குழாய்களுடன் (CRT) ஒப்பிடும்போது LCD திரைகள் கூர்மையான படங்களைக் கொண்டுள்ளன.

(2) CRT களுடன் ஒப்பிடும்போது LCD திரைகள் குறைந்த அளவு சக்தியை நுகருகின்றன.

(3) இடையே நீர்மம் உள்ள இரு கண்ணாடி அல்லது பிளாத்திக்குத் தகடுகளிலிருந்து LCD துரைகள் செய்யப்பட்டுள்ளன.

(4) CRT களுடன் ஒப்பிடும்போது LCD திரைகள் விரைவான துலங்கல் நேரத்தைக் (response time) கொண்டுள்ளன

35. திருத்தமான கூற்றைத் தெரிந்தெடுக்க.

(1) இறுவட்டுடன் ஒப்பிடும்போது இலக்கப் பல்திறப்பட்ட வட்டு (DVD) குறைந்த கொள்ளளவை உடையது.

(2) தரவுகளைப் பேனாச் செலுத்தி (pen drive) இல்/ பளிச்சீட்டுக் கோலில் (flash stick) ஒரு தடவை மாத்திரம் எழுதலாம்.

3. காந்த நாடாக்கள் (magnetic tapes) அதிக அளவு தரவுகளைத் தேக்கி வைக்கத்தக்கதாக இருக்கும் அதே வேளை காப்புத் தேக்கமாக (backup storage) வைத்து இருப்பதற்கு மிகவும் உகந்தவையாகும்.

(4) வன் வட்டின் (hard disk) பெறுவழிக் கதி (access Speed) எப்போதும் காந்த நாடாவின் பெறுவழிக் கதியிலும் பார்க்கக் குறைவானதாகும்.

36. பின்வருவனவற்றில் எது கணினி முறைமையில் ஒரு துறை (port) அன்று ?

(1) COM 1

(2) Joystick

(3) MIC in

(4) PS/2

37. கணினி நச்சுநிரல்கள் (virus) பின்வரும் எதனூடாகச் செலுத்தப்படுவ தில்லை ?

(1) மின்னஞ்சல் இணைப்புகளினூடாக

(2) பளிச்சீட்டு நினைவகக் கோல்களினூடாக (flash memory sticks) / பேனாச் செலுத்தி (pen drives) களினூடாக

(3) ஏற்பிலா (illegal)/அங்கீகரிக்கப்படாத (unauthorized) மென்பொருளினூடாக

(4) விசைப்பலகைகளினூடாக (keyboards)

38. மிகவும் திருத்தமான கூற்றைத் தெரிந்தெடுக்க.

(1) லேசர் அச்சுப்பொறி ஒரு வருவிளைவுச் சாதனமாகும்.

(2) பேசுநர் ஓர் உள்ளீட்டு வருவிளைவுச் சாதனமாகும்.

(3) சுட்டி (mouse) ஒரு வருவிளைவுச் சாதனமாகும்,

(4) விசைப்பலகை ஒரு வருவிளைவுச் சாதனமாகும்

39. தேக்க முறைமைகள் (storage Systems) பற்றிய பிழையான கூற்றைத் தெரிந்தெடுக்க.

(1) முறைமை நினைவகத்துடன் ஒப்பிடும்போது பதுக்கு நினைவகம் விரைவான பெறுவழி நேரத்தை உடையது.

(2) காந்த நாடாக்களுடன் ஒப்பிடும்போது வன் வட்டு மெதுவான பெறுவழி நேரத்தை உடையது.

(3) பதுக்கு நினைவகத்துடன் ஒப்பிடும்போது பதிவகங்கள் (registers) விரைவான பெறுவழி நேரத்தை உடையன.

(4) முதன்மை நினைவகத்துடன் ஒப்பிடும்போது பதிவகங்கள் விரைவான பெறுவழி நேரத்தை உடையன

40. பின்வரும் கூற்றுகளில் எது இலக்கமுறைப் பிரிப்பை (digital divide) உண்டாக்கும் ஒரு காரணியாகக் கருதப்படுவதில்லை?

(1) தொடர்பாடலின் உயர் கிரயம்

(2) கிராமப் பகுதிகளில் இணையத்தைப் பெறமுடியாமை

(3) கணினிகளின் விலைகள் குறைதல்

(4) உள்நாட்டு மொழிகளில் கற்றல் உள்ளடக்கங்கள் இல்லாமை